★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 20உ புதன் (5—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 21உ வியாழன் (6—12—56) [இதழ் 152

10,000 புத்தகங்கள் உள்ள நடமாடும் நூல் நிலையம்

சுமார் 10,000 புத்தகங்கள்கொண்ட ஒரு நடமாடும் நூல் நிலையம் அடுத்த ஆண்டுமுதல் சென்னையில் பவனிவரும்.

ஒரு 'லேலண்டு மோட்டார் வானில்' அமைந்துள்ள அந்நூல் நிலையம் மாலை நேரத்தில், தினத்திற்கு ஒரு வட்டம் வீதம் சுற்றிவரும்; வாசகர்கள் உட்கார்ந்து படிப்பதற்கு அதில் வசதிகள் செய்யப்பட்டிருக்கும்.

ரூ. 5 முன்பணம் செலுத்தி அதிலுள்ள புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று வாசிப்பதற்கும் அனுமதிக்கப்படுமாம்.

டில்லி ஆட்சியின் விபரீதப் போக்கு

கல்லூரிகளுக்குப் பேரிடி!

டாக்டர் இராதாகிருஷ்ணன் குழுவின் சிபாரிசு காற்றில் பறக்கிறது

800 மாணவர்களுக்குமேல் சேர்த்துக் கொள்ளக்கூடாதாம்

யோசனையை ஏற்காவிட்டால் மானியம் கிடையாதென அச்சுறுத்துகிறது டில்லி

பாட்னா, டிச. 4—

டில்லியின் விபரீதப்போக்கு, கல்லூரிகளுக்குப் பெரும் பேரிடியாக விழுந்திருக்கிறது!

கல்லூரிக் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கும் டில்லி வழங்கியுள்ள ஒரு யோசனை பெரும் அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது!

"கல்லூரிகளில், மொத்த மாணவர் தொகை 800-க்கு மேல் இருத்தலாகாது.

"மாணவர் தொகை அதிகமிருப்பதினால்தான், கல்லூரி மாணவரிடை ஒழுக்கக்கேடு வளருகிறது"

என்பதாக டில்லி ஒரு யோசனையை மாநில சர்க்கார்களுக்குக் கூறியிருக்கிறதாம்!

ஆனால், மாணவர் எண்ணிக்கையை 800 ஆகக் கட்டுப்படுத்தும்போது, கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டுமென்பதற்கான ஏற்பாடுகள் பற்றி, டில்லி ஏதும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை!

மேலும், '25 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையும் கல்லூரியில் வேண்டும்' என்று டில்லி கூறியிருக்கிறதாம்!

'இந்த யோசனைப்படி நடக்காவிட்டால், கல்லூரிகளுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது' என்றும் அச்சுறுத்தியிருக்கிறது டில்லி!

குழு கூறியதென்ன?

டாக்டர் இராதாகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட பல்கலைக் கழகக் குழு, 'கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை 1,500 வரை இருக்கலாம்' என்று சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தச் சிபாரிசையும் காற்றில் பறக்கவிட்டு, டில்லி கல்வி மந்திரி சபை, '800-க்கு மேல் கூடாது' என்று யோசனை கூறுகிறது!

தொழிலாளருக்குச் சம்பள உயர்வு அவசியம்

பொதுத் தேர்தல் நெருங்குகையில் மத்திய மந்திரிகட்கு ஞானோதயம்

அகமதாபாத், டிச. 4—

பொதுத் தேர்தல் நெருங்குகிற நேரத்தில் டில்லிப் பெரியவர்களும், மாநில மந்திரிகளும் ஏழை எளிய மக்கள்மீது அனுதாபம் கொண்டவர்கள்போல நடிக்க முற்பட்டிருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வுதர வேண்டுவது நியாயம் தான் என்ற ஞானோதயம் திடீரென மத்திய மந்திரிகள் இருவருக்கு நேற்றுத் தோன்றியிருக்கிறது.

தொழிலாளர் நாள்

அகமதாபாத் ஆலைத் தொழிலாளர் சங்கம் ஆண்டுதோறும் சங்கம் தோற்றுவிக்கப்பட்டனான டிசம்பர் 4-ம் நாளை தொழிலாளர் நாளாகக் கொண்டாடி வருகிறது.

இந்த ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட மத்திய மந்திரிகளான கந்துபாய் தேசாய் (தொழிலாளர் மந்திரி), குல்ஜாரிலால் நந்தா (திட்ட மந்திரி) ஆகிய இருவரும் தொழிலாளரிடை பேசும் போது தங்களுக்கேற்பட்ட ஞானோதயத்தை வெளிப்படுத்தினராம்.

"தொழிலாளருக்குச் சம்பள உயர்வும் விவசாயத் தொழிலாளருக்கு தகுந்த பங்கும் தரப்பட்டால்தான் அவர்களது வாங்கும் சக்தி அதிகரிக்கும்; அப்போது தான், அதிக உற்பத்தி தாக்குப் பிடிக்கும்; இது நடைபெறாவிட்டால், எல்லா திட்டங்களும் குட்டிச் சுவர்தான்" என்று குறிப்பிட்டனராம்!

சென்னையிலிருந்து பெங்களூருக்கு அரிசியாம்!

ஒரே வாரத்தில் 1,300 டன் அனுப்பப்பட்டதாம்!

புதுடில்லி, டிச. 4—

பெங்களூரில் ஏற்பட்டுள்ள அரிசி பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடந்த ஒரு வாரகாலமாக சென்னையிலிருந்து 1,300 டன் (33,000 மணங்கு) அரிசி அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள 50 சியாயவிலைக்கடைகளுக்கு நாள்தோறும் 2,000 மணங்கு அரிசி தேவைப்படுகிறதாம்.

21,000 ஊழியர்கள் அடையாளவேலை நிறுத்தம்

பம்பாய், டிச 5—

பம்பாய் மாநிலத்திலுள்ள 21,000 ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிலைய ஊழியர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

பாகிஸ்தானுக்கு அரிசி கள்ளக்கடத்தல்

தடுக்கமுடியாமலிருப்பதற்கு மந்திரி கூறும் காரணம்!

புதுடில்லி, டிச. 4—

இந்தியாவிலிருந்து அரிசி கள்ளத்தனமாகக் கிழக்குப் பாகிஸ்தானுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கமுடியாமலிருப்பதற்கு மக்கள் சபையில், விசித்திரமான ஒரு காரணம் கூறப்பட்டிருக்கிறது

"எல்லையோரத்தில் வாழ்பவர்களில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களில் ஒருவர் பாகிஸ்தான் எல்லையிலும், மற்றவர் இந்திய எல்லையிலுமாக வசிக்கின்றனர்; ஒரு வீட்டின் சமையலறை அந்த எல்லையிலும், சாமான் வைக்கும் அறை இந்த எல்லையிலுமாக இருக்கின்றன; இதனால் கள்ளக் கடத்தல் சுலபமாகிறது. இரண்டு வழிகளில் இது நடைபெறுகிறது; மீனும் அரிசியும் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன"

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், உதவி உணவு மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

துப்பாக்கிப் பிரயோகக் கொடுமைகள்!

ஆச்சாரியா விநோபா பாவே கண்டனம்

'விசாரணை நடத்த மறுப்பது நியாயமாகாது' என்கிறார்

பூனா, டிச. 4—

மாநில புது அமைப்பு விவகாரங்களை ஒட்டி மக்கள் கிளர்ந்தெழுந்தபோது, 'அகிம்சா மூர்த்தி'களான காங்கிரசார் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தி மனித வேட்டையாடிய கொடுமை குறித்து விசாரணை நடத்த மறுக்கும் போக்கிற்கு, ஆச்சாரியா விநோபா பாவே கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

'பூதான்' என்ற வார இதழில் எழுதியுள்ள கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"போலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்து சட்டபூர்வமான விசாரணை நடத்த மறுப்பது எப்படி நியாயமானதாகும் என்று எனக்குத் தெரியவில்லை.

"சில காங்கிரசார்கூட 'விசாரணை அவசியம்' என்று உணர்ந்தாலும் தங்கள் கருத்தை அறிவிக்க துணிவில்லாமலிருக்கிறார்கள்; ஏனெனில், 'அது, கட்சி விசுவாசத்திற்கு எதிரானது,' என்று கருதுகிறார்கள்.

"ஆனால், கட்சி விசுவாசம், உண்மை பற்றிய விசுவாசத்தைத் தடுக்கக் கூடாது. அகிம்சை மட்டுமல்ல—உண்மையும்கூட இந்தியாவின் பொது வாழ்வில், கடந்த சில மாதங்களில் நடைபெற்ற வருந்தத்தக்க சில சம்பவங்களின் காரணமாக அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன.

"உள் நாட்டில் சர்க்காரின் கொள்கை முழுவதும் அமைதியான — அகிம்சை பூர்வமானதாக இல்லாமற் போனால், உலகில், இந்தியாவின் செல்வாக்கு பயனற்றதாகிவிடும்!

"பம்பாயில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் நமது நண்பர்களால் நடத்தப்பட்டவை என்பதை அறியும்போதுதான் எனது துக்கம் அதிகமாகிறது.

மகாபாரதம் சான்று?

"மகாபாரதத்திலிருந்தும் இதர மத புத்தகங்களிலிருந்தும் சர்க்கார், பலாத்காரம் உபயோகிப்பதற்குச் சான்றுகள் காட்டுகிறார்கள். நான் கூடத்தான் 'மகாபாரத'த்தைக் கவனமாகப் படித்திருக்கிறேன்; அதில், சர்க்கார் பலாத்காரம் உபயோகிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கூறப்பட்டிருக்கின்றன; ஆனால் பம்பாயில் நடைபெற்றது போன்ற சம்பவங்களை நான் ஏற்க முடியாது. மேலும், நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்து விசாரணை நடத்த மறுப்பது எப்படி நியாயமாகும்?

"மக்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள் என்பது தெரிந்ததே! ஆனால் அதிகாரத்திலிருப்பவர்களுக்கு சில விசேடப் பொறுப்புகள் உண்டு.

"அமைதி வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது; ஆனால், அகிம்சை வேண்டும் என்ற உண்மையான எண்ணம்—போக்கு இல்லை; அதனால் தான், உள்நாட்டுக்கொள்கைகளில் முரண்பாடுகள் மலிந்திருக்கின்றன."

சிரியாவிலும் 'இராணுவப் புரட்சி'

சாப்ரி சர்க்கார் இராஜிநாமா?

லண்டன், டிச. 4—

சிரியாவிலும் ஒரு 'இராணுவப் புரட்சி' தோன்றியுள்ளதாக இஸ்ரேல் வானொலி தகவல் தந்திருக்கிறதாம்.

பிரதமர் பதவி இழந்தார்

இப்போது சிரியாவில் சாப்ரி எல் அஸ்ஸாலியைப் பிரதமராகக் கொண்டு நடைபெற்றுவரும் சர்க்கார், இராணுவக் கோஷ்டியின் நிர்ப்பந்தத்தின் காரணமாக இராஜிநாமாச் செய்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கர்னல் சர்ராஜ் என்பவரைத் தலைவராகக்கொண்ட இராணுவ கோஷ்டி சர்க்காரிடமிருந்து எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிவிட்டதாக பாக்தாத் வானொலி மூலம் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாய் இஸ்ரேல் வானொலி கூறுகிறதாம்.

கடந்த ஜூன் திங்களில் பதவி ஏற்ற சாப்ரி எல் அஸ்ஸாலி தனது மந்திரி சபையின் இராஜிநாமாவை குடியரசுத் தலைவரிடம் தாக்கல் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ்

சென்னை 5-12-'56 புதன்

டில்லியின் புதிய வரிகள்

முதலீட்டு இலாப வரி, இலாபங்கள் மீது உபரி வரி, மோட்டார் வரி, செயற்கைப் பட்டு உட்பட இறக்குமதியாகும் சில பொருள்கள் மீது அதிக வரி, மோட்டார் சைக்கிள்மீது வரி, 'ஸ்டாக் மார்க்கெட்' பத்திரங்களுக்கு அதிகக் கட்டண வரி ஆகிய புது வரி விதிப்புத் திட்டங்கள் மத்திய நிதி மந்திரியால் டில்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

• நாணயச் செலாவணி வீக்கம், விலைவாசி உயர்வு இவற்றைத் தடுப்பது புது வரிவிதிப்பின் நோக்கமாகும் என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

இந்தப் புது வரிவிதிப்பின் மூலம் டில்லி சர்க்காருக்கு ஆண்டுதோறும் 16 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'தனியார் துறை தொழில் முயற்சிக்கு உலைவைக்கும்; முதலீடு செய்யவொட்டாமல் நிதி முடக்கம் ஏற்படும்' என்று கூக்குரல் எழும் திசையே, புது வரிவிதிப்புகள் எவரைப் பாதிக்கும் என்பதைக் காட்டிக் கொடுப்பதாக உள்ளது. சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு இப்போது வரி விதிக்கப்படும் அம்சங்களே எளிதில் புரிந்துகொள்ள முடியாதவை என்பதும், அவர்கள் இந்த வரி விதிப்பினால் பாதிக்கப்படப் போவதில்லை என்பதும் மக்கள் சபை விவாதத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வரிவிதிப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகிற நோக்கம் கூடேறுமா என்பதிலும் பலர் சந்தேகம் கிளப்பியுள்ளார்கள். ஆனால், அந்த சந்தேகத்திற்கு ஆதாரம் இல்லை என்று சர்க்கார், காலப் போக்கில் நிரூபித்தாக வேண்டும்.

'பேராசைத் திட்டம்' என்று அந்நிய நிபுணர்கள் சிலரும், 'வடநாட்டை மட்டுமே வாழ்விக்கும் வஞ்சகமான இரண்டாவது திட்டம்' என்று தென்னாட்டவரும் எடுத்துரைக்கிற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காகப் பல வழிகளிலும் டில்லி சர்க்கார் பணம் திரட்டிவருகிறார்கள். புது வரிவிதிப்புகள் அந்த வழிகளுள் ஒன்று. அந்நியர் உதவி, உலக பாங்கில் கடன், உள்நாட்டு மக்களிடத்தில் (மறைமுகக் கட்டாய) கடன், சேமிப்பு, அன்னியச் செலாவணிப் பெருக்கம், 'பற்றுக்குறை நிதிமுறை' என்ற ரூபாய் நோட்டுக்களை அச்சடித்து வெளியிடுவது ஆகியவை, இதர முக்கியமான பணம் திரட்டும் வழிகளாக டில்லியால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவற்றுள் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது என்ற வழி, ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் முதல் ஆண்டிலேயே சமாளிக்க முடியாத பணவீக்க நிர்ப்பந்தம், விலைவாசி ஏற்றம் என்ற கசப்பான அனுபவங்களைத் தந்திருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் அபாயச் சங்கு ஊதியிருக்கின்றனர்.

இப்போது அன்னியச் செலாவணியைப் பெருக்கவும், பண வீக்க நிர்ப்பந்தத்தைக் குறைக்கவும், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் என்று கூறி, ஆண்டுதோறும் 16 கோடி ரூபாய்மட்டுமே வருமானமளிக்கக்கூடிய புது வரிவிதிப்புகளை டில்லி அறிவித்துள்ளது. என்றாலும், வரிவிதிப்பின் மூலநோக்கம், ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பணம் திரட்டுவதாகும் என்பதையும், அந்த ஐந்தாண்டுத் திட்டம் தென்னாட்டவரை வறியர்களாக்கும் கொடுமை நிறைந்த வஞ்சகத் திட்டம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்த நாட்டு மக்கள் மீது வரிவிதிக்கும் அதிகாரம் டில்லியிடமிருப்பதே, இந்த நாட்டவர் வடவருக்கு அடிமைகளாயிருக்கின்றனர் என்பதற்குக் கிடைக்கும் தெளிவான சான்றுகளுள் ஒன்று. அப்படியிருக்க, அவர்கள் விதிக்கிற இந்தப் புதிய வரிகள், இந்த நாட்டு ஏழை எளியவரைப் பாதிக்கவில்லை என்பது மட்டும் நமக்கு முழு மகிழ்ச்சி தருவதாக இருக்கமுடியாது. மேலும், இந்தப் புதிய வரிகள் மூலம் கிடைக்கும் பணம் இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படப் போவதுமில்லை; வடநாட்டை வளப்படுத்தவே பயன்படப் போகின்றது. நாம் இந்தச் சந்தர்ப்பத்திலும் இதனை நினைவூட்டாமலிருக்க முடியவில்லை என்பதினாலேயே, பெருந்தனக்காரர்களை மட்டுமே பாதிக்கக்கூடிய இந்த வரி விதிப்புகளை நாம் வரவேற்கவில்லை என்று கொள்வது அறிவீனமாகும்.

மேலும், டில்லி அறிவித்துள்ள புதிய வரிவிதிப்புகள், 'பணக்காரருக்கு மேலும் மேலும்வரிகள்போடப்படுகின்றன, காங்கிரசாரால்,' என்ற எண்ணத்தை ஏழைகளிடம் தோற்றுவிக்கப் பயன்படும் என்ற கருத்திலும், அந்த எண்ணம், வரப் போகும் பொதுத் தேர்தலுக்கு ஒரு கணிசமான அரசியல் முதலீடாகும் என்ற கருத்திலும்தான் இந்த வரிவிதிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன என்று சிலர் கூறுவதை முழுவதும் தவறுடையது எனக் கொள்ள முடியாது.

நல்வாழ்வுக்கு நிதி உதவி

புதுடில்லி, நவ. 30—

மாதர்கள், குழந்தைகள், ஊனமடைந்தவர்களுக்கான சமூக நலவாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 766 சமூக நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 31,14,650 மானிய உதவியாக அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

பக்தூனிஸ்தான் பிரச்சினையில் பெரிய தோல்வியாம்!

கராச்சி, டிச. 3—

பக்தூனிஸ்தான் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஒரு பெரிய இராஜதந்திரதோல்வி ஏற்பட்டுவிட்டதாக முஸ்லீம் லீக் இதழ் 'மார்னிங் நியூஸ்' குறிப்பிட்டுள்ளதாம்.

பக்தூனிஸ்தானை ஒரு பிரச்சினையாகப் பாகிஸ்தான் இதுவரை கருதவில்லை என்றும், தற்போது பாக்-ஆப்கன் கூட்டறிக்கை மூலம், பாகிஸ்தான் அரசாங்கம் பக்தூனிஸ்தான் பிரச்சினையை முதன் முறையாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்திருப்பதாக ஆகிவிட்டது என்றும், இது பாகிஸ்தானுக்குப் பெரிய தோல்வியென்றும் மேலும் அவ்விதழ் குறிப்பிட்டுள்ளதாம்.

அவர்கள்தான் அழைத்தார்கள்...

இவர் ஏன் ஏற்றுக்கொண்டார்?

மைசூர், டிச 3—

சிறிய முக்கியமில்லாத விழாக்களுக்கு மந்திரிகளை அழைக்கும் பழக்கத்தை மைசூர் முதன்மந்திரி நிஜலிங்கப்பா கண்டித்தாராம்!

மந்திரிகளின் நேரம் பொன்னானது என்பதை மக்கள் உணர வேண்டும்' என்றும், 'மாநிலத்தின் வேலைகளைக் கவனிக்க அந்த நேரம் பயன்படவேண்டும்' என்றும் அவர் கூறினாராம்!

ஒரு எண்ணெய் உற்பத்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், 'இந்த மாநாட்டு அமைப்பாளர்களுக்குக் குடிசைத் தொழில்களுக்கு ஆதரவு நல்குவதே சர்க்காரின் கொள்கை என்று நன்றாகத் தெரிந்திருந்தும் என்னையும், விவசாய மந்திரியையும் இங்கே ஏன் அழைத்தார்கள் என்று தெரியவில்லை?' என்று குறிப்பிட்டாராம்!

காஷ்மீர் பற்றி நேரு

புதுடில்லி, டிச. 3—

"காஷ்மீர் பிரச்சினை ஐ. நா. பாதுகாப்பு சபைக்குக் கொண்டு போகப்படுவது பற்றி இந்தியா கவலைப்படவில்லை; இது மீண்டும் ஐ. நா.-வுக்குப் போனால் இதன் துவக்கக் கால வரலாற்றிலிருந்து மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும். முதலில் இதைக் கவனியுங்கள் என்று ஐ. நா.-விடம் சொல்லலாம்," என்று பண்டித நேரு, மாநிலங்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்தது என்பதுதான் காஷ்மீர் பிரச்சினையில் பெரிய அம்சம்; அந்த ஆக்கிரமிப்பு இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கிறது,' என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

'பாகிஸ்தான் வெளிநாட்டு உள்நாட்டு விவகாரங்களில் படுதோல்வியடைந்திருப்பதால் பாகிஸ்தான் தலைவர்கள் வேண்டுமென்றே மக்கள் கவனத்தை வேறு திசையில் திருப்புவதாகவும், பகையை உண்டாக்குவதாகவும் பண்டித நேரு கூறியுள்ளார்.

யானைக்கால் நோய் சிகிச்சை ஆராய்ச்சி

கேரள மாநிலத்தில் ஏற்படும்

எர்ணகுளம், டிச. 3—

யானைக்கால் வியாதியைக் குணப்படுத்தும் முறை சம்பந்தமான ஆராய்ச்சி நிலையம் கேரள மாநிலத்தில் அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

நவீன மருந்துகளைக் குறித்தும் யானைக்கால் நோய் தடுப்புக்கான வழிகளை குறித்தும் இந்நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்படும்.

கைத்தறியாளருக்கு அரசாங்க உதவி

மத்திய மந்திரியின் டம்பம்

கைத்தறி நெசவாளர்களுக்கு அரசாங்கம் சாத்தியமான எல்லா உதவிகளையும் அளித்து வருவதாகவும், இதன் பயனாகக் கைத்தறி உற்பத்தி அதிகரித்து இருப்பதாகவும் மக்கள் சபையில் வர்த்தக அமைச்சர் டி. பி. கர்மார்க்கர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் சுமார் 11 இலட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் இந்த எண்ணிக்கை மொத்த நெசவாளர்களின் எண்ணிக்கையில் பாதியாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நூல் உற்பத்திக்காகக் கூட்டுறவு முறையில் ஆலைகள் நிறுவும் முயற்சிக்கு அரசாங்கம் சமீப காலமாக அக்கறை காட்ட முனைந்துள்ளதென்றும், மற்ற ஆலைகளைக் காட்டிலும் கூட்டுறவு ஆலைகளுக்கே முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர் தகவல் தந்துள்ளார்.

நெய்வேலியில் கிடைக்கும் வெள்ளைக் களிமண்

'இன்சுலேட்டர்' தயாரிக்கப் பயன்படுத்தப்படுமாம்

திருச்சி, டிச 4—

மின்சாரக் கம்பிகளுக்குத் தேவையான 'ஹைடென்ஷன் இன்சுலேட்டர்' உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கு திருச்சி சேஷசாயி கம்பெனிக்கு இந்தியப் பேரரசு அனுமதியளித்துள்ளதாம்

நாட்டில் இதுவே இத்தகைய தொழிற்சாலைகளுள் இரண்டாவதாகும்; மற்றொன்று பெங்களூரில் உள்ளது.

இதை நிறுவுவதற்கு ரூ. 25 இலட்சம் செலவிடப்படுமாம். இங்கு 1,200 டன் கன மின்சாரக் கம்பிகள் தயாரிக்கப்படுமாம்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியுடன் எடுக்கப்படும் வெள்ளைக் களிமண் 'இன்சுலேட்டர்' தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுமாம்.

மூன்றாவது தொழிற்சாலை பீகாரில் நிறுவப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவில் டீசல் எஞ்சின்கள் உற்பத்தி?

நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு 'டீசல்' எஞ்சின்கள் மிக முக்கியமானவையாகும்; இன்னும் மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் 85 குதிரை வேகமுள்ள டீசல் எஞ்சின்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறதாம்.

அழுகிவிடும் பண்டங்கள் கெடாமலிருக்க......!

தென்பகுதி இரயில்வேயில் குளிர் சாதனப் பெட்டிகளாம்!

புதுடில்லி, டிச. 3—

மீன், மற்றும் இதர அழுகிவிடும் பண்டங்கள் கெட்டுப்போகாமலிருப்பதற்குக் குளிர் சாதன இரயில் பெட்டிகள் தென்பகுதி இரயில்வேயில் இணைக்கப்படும் என்று உதவி போக்குவரத்து அமைச்சர் அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

வேலூர்—காஞ்சீபுரம் இடையில் இரயில் பாதை

புதுடில்லி, டிச. 3—

வேலூருக்கும் காஞ்சீபுரத்திற்கும் இடையே இரயில் பாதை அமைப்பு குறித்த ஆரம்ப 'சர்வே' வேலைகள் முடிந்து விட்டதாக மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

வடநாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்தி

டில்லி ஆட்சி வழங்கும் உதவி

புதுடில்லி, டிச. 2—

மேற்கு வங்காளம், பீகார், அசாம், ஒரிசா ஆகிய மாநிலங்களுக்கு பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக மொத்தம் ரூ. 5,63,000-த்திற்குமேல் கடன்களாகவும் உதவித் தொகைகளாகவும் இந்திய அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ளதாம்.

நங்கல் இரசாயன உர-கனநீர் உற்பத்தித் திட்டம்

அமெரிக்கத் தொழில் நுட்ப ஆலோசகர்கள் நியமனம்

நங்கல் இரசாயன உர-கனநீர் உற்பத்தித்திட்டத்திற்கு நியூயார்க்கைச் சேர்ந்த நிறுவனமொன்றை இந்திய சர்க்கார் தொழில் நுட்ப ஆலோசகர்களாக நியமித்துள்ளனர். அத்திட்டத்திற்கு ரூ 22 கோடி செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நங்கல் தொழிற்சாலை ஆண்டுதோறும் 2 இலட்சம் டன் அம்மோனியம் நைட்ரேட்டும் சுமார் 7·5 டன் கனநீரும் தயாரிக்கும்.

இதற்காக 2,500 ஏக்கரா நிலம் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 2,000 ஏக்கரா நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சிப்பந்திகளுக்காக 400 தற்காலிகக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ரூ. 427 கோடியில் மின்சார வசதி

எண்ணிக்கைபற்றி தகவல்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறிய நகர கிராமாந்திர மின்சார வசதி ஏற்பாடுகளின்கீழ் மேலும் 10,600 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவற்றில் 8,600 ஊர்கள் 5,000-க்கும் குறைந்த மக்கள் தொகையுடையவை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசியில் மொத்தம் 18,000 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; 1956 மார்ச்சில் இந்த எண்ணிக்கை 7,400 ஆக இருந்தது.

மின்சார வசதித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையாகிய ரூ. 427 கோடியில் சுமார் ரூ 75 கோடி கிராமப் பகுதிகள், சிறிய நகரங்கள் ஆகியவற்றின் மின்சார வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

இரண்டாவது திட்டக் கடைசியில் சுமார் 8 கோடி மக்களுக்கு மின்சார வசதி கிடைக்கும்.

இந்தியாவில் அணுசக்தி அபிவிருத்திக்குத் திட்டம்

அமெரிக்க நிறுவனமொன்று உதவிபுரியுமாம்

பெரிய கனநீர் எரு உற்பத்தி இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு, அதன் அமைப்பை தயாரிப்பதிலும், இதர நுணுக்கமான விவரங்களிலும் உதவி செய்வதற்காக நியூயார்க் விட்ரோ கார்ப்பொரேஷனுக்கு இந்திய சர்க்கார் 'காண்டிராக்ட்' ஒன்றை அளித்துள்ளனர்.

இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சியில், குறிப்பாக மர்மம் நிறைந்த புது அணுசக்தித் துறையில், தமது நிறுவனம் கலந்து கொள்வதை தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அந்நிறுவனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

டிச. 10 முதல் 16: தேர்தல் நிதிதிரட்டும் வாரம்!

'பஞ்சசீலப் பிதா'வின் மற்ருெரு பல்டி!

'ஹங்கேரி நிகழ்ச்சி மக்களின் எழுச்சியே!'

'நாகி கைது செய்யப்பட்டது தவறு'

'ரஷ்யத் துருப்புகள் வெளியேற வேண்டும்'

'ஹங்கேரி மக்கள் நாடுகடத்தப்படுவது உண்மைதான்

மாநிலங்கள் சபையில் நேரு பண்டிதர்

புதுடில்லி, டிச. 3—

"ஹங்கேரியின் முன்னுள் பிரதமர் நாகி கைது செய்யப்பட்டது 'மிக துரதிருஷ்டவசமானது'—அது மிக முக்கியமான, அபாயமானதொரு விவகாரமாகும்" என்று கூறியிருக்கிருர் பண்டித நேரு!

மாநிலங்கள் சபையில் வெளி விவகார விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் மேலும் அவர், 'ஹங்கேரி, யூகோ சர்க்கார்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மீறி, ருமேனியாவிற்கு நாகி கடத்தப்பட்டது மிகவும் துரதிருஷ்டவசமானது' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

ஐ நா. பொதுச் செயலாளரையும் இதர ஐ. நா. பார்வையாளரையும் அனுமதிக்க மறுத்துவரும் ஹங்கேரி சர்க்காரின் போக்கையும் பண்டித நேரு வன்மையாகக் கண்டித்திருக்கிருர்.

'மக்கள் எழுச்சியே'

"ஹங்கேரியில் நிகழ்ந்தது எல்லாம், மக்களின் எழுச்சியேயாகும்.

"ஹங்கேரி ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில் மாபெரும் தவறுகள் இழைத்துள்ளனர்; இந்தத் தவறுகளினுல் தங்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்தனர். முன்னைய சர்க்கார் செய்தவை தவறு என்பது இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"தங்கள் நாட்டில் ஆட்சியிலிருந்தவர்களுக்கு எதிராக மக்களே கிளர்ந்தெழுந்தார்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றித் தெளிவாகியுள்ளது.

"எனவே, நான் ஏற்கனவே கூறிவந்துள்ளபடி. ஹங்கேரி மக்கள், தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

"இரண்டாவதாக, ஹங்கேரியிலிருந்து, ரஷ்ய அல்லது எல்லா வெளிநாட்டு இராணுவமும் வெளியேறிவிட வேண்டும்.

கடத்தப்படுகிருர்கள்

"இந்த நிலையில்தான் நாம், ஹங்கேரி நிலைமைகளைக் கண்டறிய ஐ. நா. பார்வையாளர் அனுமதிக்கப்படவேண்டும் என்று கோருகிரேம்.

"ஹங்கேரியிலிருந்து ஏரானமானேர் நாடு கடத்தப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது; ஆனுல், இந்தக் குற்றச்சாட்டை ஹங்கேரி சர்க்கார் மறுக்கிறது.

"எனவே, என்ன நடக்கிறது—நடந்தது என்பதை விசாரணை செய்யாமல் தீர்ப்புக் கூறுவது என்பது இயலாத காரியம்; எனவே, தீர்ப்புக் கூறுவதற்கு முன், ஐ நா பார்வையாளர்கள் ஹங்கேரி செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறியுள்ளோம்.

குற்றச்சாட்டு உண்மைதாளு?

"ஹங்கேரி மக்கள் நாடு கடத்தப்படுகிருர்கள் என்ற குற்றச்சாட்டு உண்மைதானே என்று யூகிக்கப்படும் வகையில்தான் இருக்கிறது, ஐ. நா. பார்வையாளரை அனுமதிக்க மறுக்கும் ஹங்கேரி சர்க்கார் போக்கு!

"அவர்களது மறுப்பு, குற்றச்சாட்டுகள் ஓரளவேனும் உண்மைதான் என்று மக்கள் யூகிக்க—சந்தேகிக்க இடமளிப்பதாயுள்ளது.

அகதிகள்!

'ஹங்கேரியிலிருந்துவரும் அகதிகளிடமிருந்துதான் விவகாரங்களைக் கேட்டறிய வேண்டிவரும்போலிருக்கிறது! அவர்கள் கூறுவது மிக மதிப்புடையதுதான்! ஆனுல், பொதுவாக அகதிகளின் கருத்து, ஒருதலைப்பட்சமானதாகவும் மிகைப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும்"

நேரு இப்படிக் குறிப்பிடுகையில், உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு, 'இதற்கு நீங்கள் கூறும் மாற்றுவழி என்ன?' என்று கேட்டபோது, 'நான் ஒன்றும் கூறுவதற்கில்லை,' என்று கூறியிருக்கிருர் நேரு!

ஐ. நா. தீர்மானம்

"இன்னும் இரண்டொரு நாளில், ஐ. நா-வில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை, நாம் ஆமோதிக்கவோ மறுக்கவோ முடியாத நிலையிலிருக்கிரேம்; மிகச் சிக்கலான ஒரு விவகாரத்திற்கு, மிகச் சுலபமான வழிதேட நினைப்பது, நம்மால் ஏற்கமுடியாததாயிருக்கிறது,"

என்றெல்லாம் நேரு குறிப்பிட்டிருக்கிருர்.

எகிப்திலிருந்து!

பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புகள் வெளியேறும்

லண்டன், டிச. 3—

எகிப்திலிருந்து தங்கள் துருப்புகளைத் திருப்பி அழைத்துக்கொள்வதைத் தாமதமின்றிச் செய்வது என்று பிரிட்டிஷ், பிரெஞ்சு சர்க்கார்கள் முடிவு செய்துவிட்டதாக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி செல்வின் லாயிட் மக்கள் சபையில் அறிவித்திருக்கிருர்.

ஐ. நா. படையின் தலைவருடன் கூடிப்பேசி, பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புகளைத் திரும்பப் பெறுவதற்குரிய கால அட்டவணை வகுக்குமாறு பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புகளின் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகவும் லாயிட் கூறியிருக்கிருர்.

சூயஸ் போர் தரும் மற்ருெரு பரிசு!

புதுடில்லி, டிச. 3—

சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டதற்கு முன்பு இருந்த விலையைவிட தற்போது எகிப்தின் பருத்தி விலைகள் ரூ. 200 கூடுதலாக இருப்பதாக மாநிலங்கள் சபையில் வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சியாங் பதில் தரவில்லை?

புதுடில்லி, டிச. 1—

சீன அரசாங்கத்தில் சியாங்-கே-ஷேக்குக்கு உயர் பதவி அளிப்பதாக சீனப் பிரதமர் கூறியதற்கு, உருப்படியான பதிலொன்றும் இதுவரையில் வரவில்லையாம்!

இது உண்மையா?

லண்டன், டிச. 3—

தற்போதைய இராக் அமைச்சரவை இராஜிஞமா செய்யவேண்டுமென்றும், பாக்தாத் ஒப்பந்தத்திலிருந்து இராக் விலக வேண்டுமென்றும் கோரிக் கிளர்ச்சி நடத்தும் தேசிய இயக்கத்தை ஒடுக்குவதற்குப் படைகள் அனுப்புமாறு துருக்கியிடம் இராக் பிரதமர் கேட்டுள்ளதாக ரஷ்ய செய்தி நிலையமான 'டாஸ்' கூறியுள்ளதாம்.

புகார் பொய்யாயிற்று!

நியூயார்க், டிச. 1—

சிரியா எல்லையில் இஸ்ரேல் இராணுவம் குவித்துவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட புகாரை ஐ. நா. சபை நிராகரித்துவிட்டது

ஐ. நா. செயலாளர் ஹாமர்ஷீல்ட் புகார் கிடைத்ததும் ஐ. நா. சார்பில் அந்த பகுதிகளைப் பார்வையிட்டார்.

அல்ஜீரியாவில் போர் நிறுத்தம் ஏற்படும்?

சமரசம் பேசுவதற்கு பிரான்சு முன்வருகிறது

பாரிஸ், டிச 2—

அல்ஜீரியாவில் எல்லோருக்கும் சம உரிமை வழங்கப்படும் என்றும் போர் நிறுத்தத்திற்குத் தீவிரவாதிகளுடன் கலந்து பேசுவதற்கு அரசாங்கம் தயாராகயிருப்பதாகவும் பிரெஞ்சுப் பிரதமர் மோலே கூறியுள்ளார்.

போர் நிறுத்தம் ஏற்பட்டபின் மூன்று மாதத்திற்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் உறுதி கூறியுள்ளார்.

அல்ஜீரியாவில் 1,200 ஐரோப்பியர்களும் 80 இலட்சம் முஸ்லீம்களும் இருப்பதாகத் தெரியவருகிறது.

கம்யூனிஸ்டு காரியாலயம் தீக்கிரையாகியதாம்

லண்டன், டிச. 3—

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் மாஞ்செஸ்டர் தலைமைக் காரியாலயம் இன்று தீப்பிடித்துச் சாம்பலாகிவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஐ. நா. பார்வையாளரை அனுமதிக்கமாட்டார்களாம்

செயலாளரை மட்டும் பிறிதோர் நாள் அனுமதிப்பார்களாம்

ஹங்கேரி சர்க்கார் போக்கு

நியூயார்க், டிச. 3—

'ஐ. நா. பொதுச்செயலாளர் மட்டும் கொஞ்சநாள் கழித்து புகாடெஸ்ட் நகருக்கு வருவதை ஏற்றுக்கொள்வோம்' என்றும், 'ஆனுல் ஐ. நா. பார்வையாளர்களை அனுமதிக்கமாட்டோம்' என்றும் ஹங்கேரி சர்க்கார் அறிவித்திருக்கிறதாம்.

அமெரிக்கா முடிவு

ஹங்கேரியில், ரஷ்யா நடத்திய 'அடக்குமுறை' காரணமாகப் பல துறைகளிலும் சர்க்கார் மூலம் ரஷ்யாவுடன் கொண்டுள்ள தொடர்புகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பது என்று அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக வெளிவிவகார அலுவலகம் அறிவித்திருக்கிறது.

எகிப்து, அங்கேரிக்கு ஐ. நா. குழு தரும் உதவி

புதுடில்லி, டிச. 3—

அங்கேரிக்கும் எகிப்துக்கும் 1957-58-ம் ஆண்டுகளில் கல்வி உதவிக்காக 5-இலட்சம் டாலர்களைக் கொடுக்கஐ நா. கல்வி விஞ்ஞான, கலாச்சார அமைப்புத் திட்டக்குழு முடிவு செய்துள்ளது.

ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

பேச்சுவார்த்தைகள் காலம் கடத்தப்படுகின்றன

சென்னை, டிச. 3—

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறினைத் தீர்த்து வைப்பதற்காக மத்திய மந்திரி படாஸ்கர் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்ததல்லவா?

ஆனுல், அவர் திட்டமிடப்பட்டிருந்தபடி டிசம்பர் 10-ந் தேதி அன்று வருவதற்கு இல்லை என்றும் டிசம்பர் 15-ந் தேதிக்குமேல் வருவது பற்றிப் பின்னர் எழுதுவதாகவும், காமராசருக்குக் கடிதம் எழுதிவிட்டாராம்.

'டிசம்பர் 10-ந் தேதி பேச்சுவார்த்தைகள் நடத்துவதானுல், ஐதராபாத்தில் நடத்த வேண்டும்' என்று சஞ்சீவரெட்டி கேட்டிருந்தார் என்றும், இப்போது தேதி தள்ளிப்போடுவதால், பேச்சுக்கள் சென்னையிலேயே நடைபெறலாம் என்றும் கூறப்படுகிறது.

கேட்டீரா, சேதி!

ஓய்வுக்காகப் ஜமைக்கா சென்றுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ஈடனுக்கு வழிச் செலவுக்கு 700 பவுன்கள் ஆகிறதாம்; சர்க்காரிடமிருந்து அத்தொகையை பெற்றுக் கொள்ளாமல், தன்னுடைய சொந்தச் செலவிலேயே அவர் சென்றுள்ளார் என்று செய்தி தரப்பட்டிருக்கிறது.

சர்க்கார் மருந்துக் கிடங்கு ஊழியர்கள் போராட்டம்

சம்பளம் பெற மறுப்பு

சென்னை, டிச. 3—

அரசாங்கத்தின் மருத்துவக் கிடங்கு இலாகா, சென்னையிலுள்ள மத்திய சுகாதார இலாகா ஆகியவற்றின் 3-வது பிரிவு ஊழியர்கள் தங்களுடைய இரு முக்கியக் கோரிக்கைகள் தீர்த்துவைக்கப்படாததினுல் டிச. 1-ந் தேதியன்று சம்பளம் வாங்க மறுத்துள்ளனர்

10 முதல் 14 ஆண்டுகள் வேலை செய்தவர்கள் இன்னும் 'தற்காலிகமானவே' கருதப்பட்டு வருவதாகவும், இங்கு வேலை செய்பவர்கள் உயர்தர வகுப்புக்கு முன்னேற வழியில்லை என்றும், இந்த இரண்டு கோரிக்கைகளும் மிகவும் முக்கியமானவை என்றும் ஊழியர் சிறுவனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பவுண்டுக்கு எட்டணு!

புதுடில்லி, நவ. 30—

1956 டிசம்பர் திங்களில் தேயிலை ஏற்றுமதி வரியை பவுண்டுக்கு எட்டு அணுவாக நிர்ணயிக்க இந்திய சர்க்கார் முடிவுசெய்திருக்கிறதாம்.

அதிசயந்தான்!

1957-ம் ஆண்டில் குருகோவிந்தசிங்கிற்கு இரண்டு பிறந்த நாள் விழாக்கள் வருவதால் இரண்டு நாட்களுக்கும் விடுமுறை தரப்பட்டுள்ளதாம்.

1958-ம் ஆண்டில் குருகோவிந்தசிங்கிற்குப் பிறந்த நாள் விழாவே இல்லை என்று பீகார் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் மாணவர் மன்றம் துவக்கம்

1—12—56 மாலை, சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழக மாணவ—மாணவிகள் படிப்பகத்தில், தோழர் ரனபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் மன்றம் துவக்கப்பட்டது. பல தோழர்கள் மாணவர் மன்றம் பற்றிக் கருத்துரை வழங்கினர். பின்னர், தோழர்கள் மா. தனபால், டி. கே. சீனிவாசன், வி. கோதண்டராமன், தோழியர் எல். வனஜா ஆகியோர் முறையே மன்றச் செயலாளர், பொருளாளர், தலைவர், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அண்மையில் ஏற்பட்ட தூத்துக்குடி இரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தவருக்கும் படுகாயமுற்றேருக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாணவர்—மாணவிகள் பேச்சுப் போட்டி முடிவுகள்

வடசென்னை பொழுதுபோக்கு சங்கத்தின் இலக்கிய, கலாச்சாரக் கிளையின் சார்பில் நடந்த 22-ந் தேதியன்று, வண்ணை சுந்தர மூர்த்தி செட்டியார் பள்ளியில், உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பள்ளிகளிலிருந்து 41 மாணவர்களும் 13 பெண்களும் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் 'நான் போற்றும் தலைவர்' என்ற பொருள் குறித்துப் பேசினுர்கள். வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு வெள்ளிக் கோப்பைகள் பரிசளிக்கப்பட்டன. ஆண்கள் பிரிவில் சைதாப்பேட்டை மாதிரி உயர்நிலைப்பள்ளி மாணவர் என். சொக்கின்செல்வராசு, வண்ணை தியாகராய உயர்நிலைப்பள்ளி மாணவர் எம். சத்தியநாதன், பெரம்பூர் ஆர். பி சி சி. உயர்நிலைப்பள்ளி மாணவர் சார்ல்ஸ் செல்லத்துரை ஆகியோர் முறையே முதல், இரண்டாவது மூன்ருவது பரிசும், பெண்கள், பகுதியில் எழும்பூர் உயர்நிலைப் பள்ளி மாணவி ஆர். கிரேஸ், இராயபுரம் செயின்ட் ஆனீஸ் உயர்நிலைப்பள்ளி மாணவி கே. பானுமதி ஆகியோர் முறையே முதல், இரண்டாவது பரிசும் பெற்றனர்.

ஆண்களில், முதற்பரிசு பெற்ற தோழர் என். சொக்கின் செல்வராசு வ. உ. சி. பற்றியும், இரண்டாவது பரிசு பெற்ற தோழர் எம். சத்தியநாதன் அண்ணு அவர்கள் பற்றியும், மூன்ருவது பரிசு பெற்ற தோழர் சார்ல்ஸ் செல்லதுரை ஆப்ரகாம் லிங்கன் பற்றியும் பேசினர்.

அதேபோல பெண்களில், முதற் பரிசு பெற்ற தோழியர் வி. ஆர். கிரேஸ் திரு. வி. க. பற்றியும், இரண்டாம் பரிசு பெற்ற கே. பானுமதி அண்ணு பற்றியும் பேசினர்.

வேலூர் (சேலம்) ஊராண்மைக் கழக அனுதாபம்

29-10-56 மாலை 4 மணிக்கு நடைபெற்ற வேலூர் (சேலம்) ஊராண்மைக் கழகக் கூட்டத்தில் தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனுர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடமையாற்ற கழகத் தோழர்களே விரைவீர்!

சூயஸ் கால்வாயை சர்வ தேசீயமயமாக்கும் திட்டம்

செத்துவிட்டதென்கிறார் நேரு

"பலாத்காரத்தின் மூலமாகக் கம்யூனிசம் திணிக்கப்பட முடியாது என்பதைக் கிழக்கு ஐரோப்பியச் சம்பவங்களும், காலனி ஆதிக்கத்தைத் திரும்பவும் கொண்டுவர முடியாது என்பதை மேற்கு ஆசியச் சம்பவங்களும் தெளிவாகக் கூறுகின்றன" என்று பண்டித நேரு மாநிலங்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், எகிப்திலிருந்து பிரிட்டிஷ், பிரெஞ்சுப்படைகள் வாபசாகும் என்ற அறிவிப்பை வரவேற்றதோடு சூயஸ் கால்வாயை சர்வதேசியமயமாக்கவேண்டும் என்ற திட்டம் செத்துப்போய்விட்டது என்றும், பழைய 18 நாடுகள் திட்டத்தை பிரிட்டன் மீண்டும் கிளறக்கூடாது என்றும் கூறியிருக்கிறார்.

திருத்தம் தோல்வி

சர்க்காரின் வெளிவிவகாரக் கொள்கைக்கு, 'ஹங்கேரியில் ரஷ்யா நடந்துகொண்ட விதம் பற்றி சர்க்கார் துவக்கத்தில் எடுத்த நிலை உறுதியானதாக இல்லை,' என்று பி. சோ. உறுப்பினர் கொண்டுவந்த திருத்தம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

'பாகிஸ்தான்மீது படையெடுக்கமாட்டோம்'

—நேரு

'எங்கள் வெளிநாட்டுக் கொள்கையில் தலையிடாதீர்'

—சுராவர்த்தி

புதுடில்லி, டிச. 4—

"இந்தியா, பாகிஸ்தான் மீது படையெடுக்கும் என்று பாகிஸ்தான் சர்க்கார் பிரசாரம் செய்வதானது, பின்னால் ஏதோ, பாகிஸ்தானிலிருந்து தொல்லை வரப்போகிறது என்பதற்கான முன்னறிவிப்பேயாகும்" என்று, பண்டித நேரு மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

சண்டைக்குப் போகமாட்டோம்

"தான் தாக்கப்பட்டாலன்றி இந்தியா, பாகிஸ்தானுடன் சண்டைக்குப் போகாது என்று ஐந்தாண்டுகளுக்கு முன்னால் நாம் அறிவித்திருப்பது, இன்றும் உண்மையானதே" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

தலையிடாதீர்!

பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி டாக்காவில் பேசும்போது, 'பண்டித நேரு, பாகிஸ்தானின் வெளி விவகாரக் கொள்கையில் தலையிடாதிருப்பதுதான் விவேகமானது; என்னுடைய வெளிநாட்டுக் கொள்கையில் நான் தவறிவிட்டதாக நேரு கூறுவாரானால், அதுவே நான் பெற்ற பெரும் வெற்றியாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மாநிலங்களுக்கு டில்லியின் தாக்கீது

புதுடில்லி, டிச. 3—

நியாயவிலைக் கடைகளில் அரிசி அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று புகார் கிடைத்ததின்பேரில், நியாயவிலைக் கடைகளை மேற்பார்வையிடும் ஏற்பாட்டை மேலும் பலனுள்ள அளவுக்குச் சீர்திருத்தும்படி மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் தாக்கீது பிறப்பித்துள்ளதாம்.

வெளியேறுகின்றனர்!

நிகோசியா, டிச. 4—

எகிப்திலுள்ள பிரெஞ்சுப் படைகளை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாக பிரெஞ்சு இராணுவ அதிகாரி அறிவித்துள்ளார்.

இரங்கூன், டிச. 4—

இரங்கூன் வடபகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட ஒரு பெரிய தீ விபத்தில் 1,500 வீடுகள் எரிந்து சாம்பலாயின; 10,000 பேர் வீடிழந்து தவிக்கின்றனராம்.

தேர்தல் தேதிகள்

புதுடில்லி, டிச 4—

'வரப்போகும் பொதுத் தேர்தலுக்கான தேதிகள் இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படும்" என்று, மக்கள் சபையில் சட்ட மந்திரி சி. சி. பிஸ்வாஸ் தெரிவித்திருக்கிறார்.

சிறைச்சட்டங்கள்கூட அகில இந்திய அடிப்படையில் அமையுமாம்!

புதுடில்லி, டிச. 4—

"இந்தியா முழுமைக்குமாக ஒரே மாதிரியான சிறைச் சட்டங்கள் வகுப்பதற்காக பல மாநிலங்களின் சிறை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று சீக்கிரமே அமைக்கப்படும்," என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில், உள்நாட்டிலாகா மந்திரி தத்தார் கூறியிருக்கிறாராம்.

'நிலப்பிரபுத்துவ கால அதிகாரச் சின்னம்'

'இக்காலத்திற்குப் பொருந்தாது'

ஆந்திர சட்டசபையின் புதிய தலைவர் நடவடிக்கை

ஆந்திர பிரதேச சட்டசபையின் சபாநாயகராக திரு. எ. காளேஸ்வரராவ் என்ற காங்கிரஸ் அபேட்சகர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்போதைய தலைவர் ஆர். எஸ். என். டோரா கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருக்கிறார்.

77 வயதான திரு. காளேசுவர ராவ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவரை முதன் மந்திரியும் எதிர்க் கட்சித் தலைவர்களும் சேர்ந்து தலைமைப் பீடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர்.

பல கட்சியினரும் அவரைப் பாராட்டினர்.

முதல் நடவடிக்கை

தலைவரானதும் முதல் காரியமாக காளேசுவர ராவ் அவர்கள், சபையிலிருந்த வெள்ளியினாலான 'செங்கோலை' அப்புறப்படுத்தியிருக்கிறார். உறுப்பினர்கள், ஆரவாரத்தோடு அதனை வரவேற்றிருக்கின்றனர்.

'நிலப் பிரபுத்துவ காலத்து அதிகாரச் சின்னம் இது! இக்காலத்திற்கு அது பொருந்தாது' என்று காளேசுவர ராவ் கூறியிருக்கிறார்.

புகளூர் சர்க்கரை ஆலை மீண்டும் இயங்குகிறது

புகளூர், டிச. 1—

இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக மூடப்பட்ட புகளூர் சர்க்கரை ஆலை மீண்டும் வேலை துவங்கியுள்ளது.

அங்கு நாள்தோறும் 900 டன் கரும்புச் சாறு பிழியப்பட்டு 900 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

கழகக் கூட்டங்கள்

★

லெப்பைக்குடிக்காடு:
ரேடியோ மைதானத்தில்
7—12—56 மாலை 4 மணிக்கு
தலைவர்: என். டி. ஏ. சமத்
பேசுவோர்:
மு. கருணாநிதி
அம்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி
எஸ். ஏ. ஜி. ராபி
சு. அமராவதி

★

பெரம்பலூர்:
ரேடியோ மைதானத்தில்
7—12—56 இரவு 7½ மணிக்கு
தலைவர்: து. ப. அழகமுத்து
பேசுவோர்:
மு. கருணாநிதி
அம்பில் தர்மலிங்கம்

சென்னை வ. உ. சி.

இளைஞர் மன்ற ஆண்டு விழா

பொதுச்செயலாளர் கலந்துகொள்வார்

7—12—56 மாலை 6-மணிக்கு சென்னை—26-வது வட்டம் பெரியமேட்டு வ. உ. சி. இளைஞர் மன்ற 11-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், எவரெஸ்ட் ஓட்டல் அருகில், வீராசாமி பிள்ளை தெருவில் தோழர் மு. சுந்தரராசு எம்.சி. தலைமையில் நடைபெறும்.

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் திரு. வி. க. படத்தைத் திறந்து வைப்பார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர் இரா. கோதண்டராமன் அவர்களும் பேசுவர்.

மதுரை மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

"மதுரை மாவட்ட தி. மு. கழகக் கிளைத் தோழர்கள், பொதுச்செயலாளர் அறிக்கைப்படி 10-12-56 முதல் 16-12-56 வரை தேர்தல் நிதி திரட்டும் வேலையில் ஈடுபட்டு பெரும் தொகை திரட்டி அனுப்பிவைக்க வேண்டுகிறேன்"

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

தூத்துக்குடி நகர சபை உபதேர்தல்

சாமியின் மைத்துனர் வெற்றி

தூத்துக்குடி நகர சபையில் தோழர் கே. வி. கே. சாமி மறைவின் காரணமாகக் காலியான 18-வது வார்டு உறுப்பினர்ஸ்தானத்திற்கு நடைபெறவிருந்த தேர்தலில், தோழர் சாமியின் மைத்துனரான எஸ். வெள்ளைச்சாமியை எதிர்த்துப் போட்டியிட முன்வந்தவர்களனைவரும் தங்கள் விண்ணப்பங்களை திரும்பப் பெற்றுக்கொண்டதால், தோழர் எஸ். வெள்ளைச்சாமி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ந. நி.)

தோழர் அ. சுப்பிரமணியம் குணமடைந்து வருகிறார்

25—11—56 மாலை 4½ மணிக்கு காலி ஒருவனால் தடிகொண்டு தாக்கப்பட்டு அருப்புக்கோட்டை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள அருப்புக்கோட்டை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. சுப்பிரமணியம் தமது காயங்கள் ஆறிவருவதாகவும், கழகத் தோழர்களும் பொது மக்களும் அமைதியாக இருக்குமாறும் தெரிவித்துக் கொள்கிறார்.

மக்கள் சபையின் காங்கிரஸ் உறுப்பினர்

பதவியைப் பறிகொடுத்தார்

தொடர்ந்து கூட்டங்களுக்கு வராமலிருந்ததின் எதிரொலி

மக்கள் சபைக் கூட்டங்களுக்கு தொடர்ந்து வராமலிருந்ததினால், ஒரிசாவைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் சிவ நாராயண் சிங் மகா பத்ரா என்பவர் தமது பதவியை இழந்திருக்கிறார்.

60 நாள் வரைதான், சபைக் கூட்டங்கள் நடைபெறும் காலத்தில் தொடர்ந்து வராமலிருக்கலாம்.

இந்த அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் தொடர்ச்சியாக சபைக்கு வராதிருந்த அந்த உறுப்பினரை மன்னித்துவிட மக்கள் சபை மறுத்திருக்கிறது; அதன்படி அவருடைய ஸ்தானம் காலி என்று அறிவிக்கப்படுமாம்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், மக்கள் சபை கலைக்கப்படவிருக்கும் குறுகிய காலத்திற்குள் இத்தனை கடுமையான நடவடிக்கை தேவை இல்லை என்று கூறியிருக்கின்றனர்.

1950-ம் ஆண்டில், தற்காலிக மக்கள் சபையில், இதே காரணத்திற்காக நான்கு உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டது என்றாலும், 'குடியரசா'ன பின்பு ஒரு உறுப்பினர் பதவி இழப்பது இதுவே முதல் முறையாம்!

9-12-56

தி. மு. க. தேர்தல் நிதிக்காகக் கலைவிருந்து!

உங்கள் கவனத்துக்கு ஒரு செய்தி—
அன்று காணக் கிடைக்கும் கலை நிகழ்ச்சிகளில் ஒன்று,

சுமைதாங்கி!

★ எம். ஜி. இராமச்சந்திரன் தயாரித்துத் தமிழகக் கலை உலகுக்கு அளித்திடும் புதிய நாடகம் சுமைதாங்கி!

★ சென்னையில் இதுவரை நடைபெற்றதில்லை!

★

டிசம்பர் 9 — எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

அண்ணா அவர்கள் தலைமையில்

மும்மணிகள் ஒளிவிடும் ஒப்பற்ற நாள்—டிசம்பர் 9!

★

மணிமகுடம் - ஓர் இரவு - சுமைதாங்கி

எஸ்.எஸ்.இராசேந்திரன், கே.ஆர்.இராமசாமி, எம்.ஜி.இராமச்சந்திரன்

அனைவரும் ஒருசேர அளித்திடும் அற்புத விருந்து!

★ கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து! காணிக்கை செலுத்திடும் வாய்ப்பு!

★ கலை நிகழ்ச்சிகளுக்கான **உங்கள் கழகம் அழைக்கிறது!**

★ குடும்பத்துடன் வாரீர்! குதூகலக் காட்சிகள் காணீர்!

கட்டணம்: ரூ. 10, 5, 3, 1; பெண்கள் ரூ. 1.

குறிப்பு:-6—12—56 வியாழன் முதல் சென்னை—இராயபுரம் தி. மு. க. தலைமை நிலையத்தில் ('அறிவகம்') டிக்கெட்டுகள் கிடைக்கும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.